செ.வெ.எண்: 01/பிப்ரவரி நாள்: 01.02.2016

# செய்திக்குறிப்பு

31.12.2015 நிலவரப்படி நடைமுறையிலிருந்த குடும்ப அட்டைகளின் செல்லத்தக்க காலத்தை 31.12.2015 தேதிக்கு பின்னர் 01.01.2016 முதல் 31.12.2016 வரை மேலும் ஓராண்டிற்கு நீட்டித்து தற்போது 2016 ஆண்டு இறுதி வரை அத்தியாவசியப் பொருள்களை நியாயவிலைக்கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் பெறத்தக்க வகையில் ஏற்கனவே குடும்ப அட்டையில் ஆண்டு குறிப்பிடாமல் உள்ள உள்தாளைப் பயன்படுத்தி கொள்வதற்கு அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

எப்பொருளும் வேண்டாதோருக்கு வழங்கப்பட்ட வெள்ளை நிறமுடைய ”N” குடும்ப அட்டைகளும் இருப்பிட முகவரி ஆதாரத்திற்காக ”தட்கல்” முறையில் வழங்கப்பட்டுள்ள மஞ்சள் நிறமுடைய “N” குடும்ப அட்டைதாரர்களும் நியாய விலைக்கடையில் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை வாங்க வேண்டிய அவசியமில்லை என்பதால் அவர்கள் நியாயவிலை கடைகளுக்கு வருவதில்லை. மேற்கூறிய குடும்ப அட்டைதாரர்கள் அவர்களுடைய குடும்ப அட்டைகளை புதுப்பித்துக் கொள்வதற்கு ஏதுவாக இணையதளத்தில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**இணையதள முகவரி www.consumer.tn.gov.in ஆகும்.**

இந்த இணையதள முகப்பில் N Cards Renewal for 2016 என்ற இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனை பயன்படுத்தி குடும்ப அட்டைதாரர்கள். தங்களுடைய குடும்ப அட்டை எண்ணை பதிவு செய்தபிறகு அவர்களுடைய குடும்ப அட்டைகளில் ஒட்டி பராமரிக்கும் விதமாக குடும்ப அட்டை காலநீட்டிப்பு பதிவுச்சீட்டு கணினியில் அச்சடித்து குடும்ப அட்டைகளில் ஒட்டிக் கொள்ளும் விதமாக அளிக்கப்படும். இதனை மேற்கூறிய “N” குடும்ப அட்டைதாரர்கள் தங்களுடைய குடும்ப அட்டைகளில் ஒட்டிக்கொள்ள வேண்டும். இத்தகைய காலநீட்டிப்பு பதிவுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ள குடும்ப அட்டைகள் புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளாக கருதப்படும். இணையதள வசதியை பயன்படுத்த இயலாத “N” குடும்ப அட்டைதாரர்கள் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையால் மாதந்தோறும் நடத்தப்படும் பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்டத்தில் தங்களுடைய “N” குடும்ப அட்டைகளை புதுப்பித்துக் கொள்ளலாம். மேற்கூறிய வசதிகள் 12/01/2016 முதல் செயல்பாட்டிற்கு வரும். மேற்கூறிய “N” குடும்ப அட்டைதாரர்கள் இவ்வசதிகளை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**